**தலைப்பு - 267- முல்லைத்தீவு மாவட்ட செயலகம்/ கச்சேரியின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 மற்றும் 2 ஆம் பந்திகள் முல்லைத்தீவு மாவட்ட செயலகம்/ கச்சேரி கணக்குகள் மீதான பொதுவான தகவல்களை கொண்டுள்ளதுடன் முதல் 3 பந்திகளில் கணக்காய்வு அவதானிப்புகள் காணப்படுகின்றன.

## 1 மாவட்ட செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்

(அ) மாந்தை கிழக்கு

(ஆ) கரைதுறைப்பற்று

(இ) ஒட்டிசுட்டான்

(ஈ) புதுக்குடியிருப்பு

(உ) துணுக்காய்

(ஊ) வெலிஓயா

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிப்பதிவேடுகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய பதிவேடுகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளில் மேற்கொள்ளப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2015 செப்தெம்பர் 14 ஆந் திகதி கணக்கீடு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப் பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்குகள், இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்தல், பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**(அ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

மாவட்ட செயலகத்திற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 214.77 மில்லியனாக இருந்ததுடன் அதில் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 206.30 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன்படி, தேறிய ஏற்பாடுகளில் சேமிப்பு ரூபா 8.47 மில்லியன் அல்லது தேறிய ஏற்பாடுகளில் 3.94 சதவீதமாக இருந்தது.

| செலவினம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டுவருபவை | 144.72 | 136.52 | 8.20 | 5.67 |
| மூலதனம் | 70.05 | 69.78 | 0.27 | 0.38 |
| மொத்தம் | **214.77** | **206.30** | **8.47** | **3.94** |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு**

பல்வேறு நடவடிக்கைளுக்காக 15 அமைச்சுக்கள் மற்றும் 16 திணைக்களங்களிடமிருந்து ரூபா 961.17 மில்லியன் மொத்தமான நிதி ஏற்பாடுகள் பெறப்பட்டிருந்ததுடன் அதில், ரூபா 777.22 மில்லியனான தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன்படி ரூபா 183.95 மில்லியன் சேமிப்புகளாக இருந்ததுடன் இது பெறப்பட்ட மொத்த ஏற்பாடுகளில் 19.14 சதவீதமாக இருந்தது.

## 2.2. முற்பணக் கணக்கு

### 2.2.1 அரச உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லை**

மாவட்ட செயலகத்தின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் கணக்கு தொடர்பில் பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதிகள் | |
|---|---|---|---|---|---|---|
| | உச்ச எல்லை | உள்ள படியானது | இழிவு எல்லை | உள்ள படியானது | உச்ச எல்லை | உள்ள படியானது |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 26701 | 12.00 | 11.99 | 6.00 | 9.36 | 50.00 | 35.06 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட செயலகத்தின் 6003/0000/00/0043/0000/000 ஆம் இலக்க வைப்புக் கணக்கு மீதி ரூபா 36,863,113 ஆகும்.

## 2.4 கணக்காய்வு அவதானிப்புகள்

2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம், முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையின் 4 ஆம் பந்திகளில் காணப்படுகின்ற கணக்காய்வு அவதானிப்புகளிற்கு உட்படுத்தப்பட்டவை திருப்திகரமாகத்

தயாரிக்கப்பட்டுள்ளன என அவதானிக்கப்படுகின்றது. முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளில் பொருண்மையான மற்றும் முக்கியமான அவதானிப்புகள் அவற்றின் மீதான 3:1 முதல் 3:13 ஆம் பந்திகளில் காணப்படுகின்றன.

## 3. தலைப்பு 267 முல்லைத்தீவு மாவட்ட செயலகம்/ கச்சேரி

### 3.1 கணக்குகளின் சமர்ப்பித்தல்

மாவட்ட செயலகம் 2015 மார்ச் 31 அளவில் கணக்காய்விற்காக வருமானக் கணக்குகளைச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், அந்த கணக்குகள் 2015 ஒக்தோபர் 14 வரையும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்களைப் பேணாமை

மாவட்ட செயலகம் பின்வரும் பதிவேடுகளை பேணப்பட்டிருக்காத அதேநேரம் வேறு சில பதிவேடுகளையும் முறைப்படி பேணப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை என கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டு வகை | உரிய பிரமாணங்கள் | அவதானிப்புகள் |
|---|---|---|
| அடியிதழ் புத்தகப் பதிவேடு | கச்சேரிக் கைநூல் 5:10 | பேணப்பட்டிருக்கவில்லை |
| புத்தகங்களின் தொகுப்பு | கச்சேரிக் கைநூல் 5:9 | பேணப்பட்டிருக்கவில்லை |
| தொலைபேசிப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 846(3), 845(1) | நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை |
| குறைநிரப்பு பதிவேடு | நிதிப்பிரமாணம் 533 | நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை |
| கட்டுநிதிப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 371 | நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை |
| நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை |
| கணனிகள், உபபாகங்கள் மற்றும் மென்பொருட்கள் மீதான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை |

**3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

மாவட்ட செயலகம் மற்றும் அதன் கீழான ஆறு பிரதேச செயலகங்கள் என்பவற்றின் ரூபா 7,842,114 மொத்தமான நூற்று எழுபத்தியேழு கொடுக்கல் வாங்கல்கள் பற்றுச்சீட்டுகள், விலைப்பட்டியல், சிட்டைகள், வருகைத்தாள், மேலதிக நாட்குறிப்பு, பெறுமதி சேர் வரி சான்றிதழ், அனுமதிக் கடன்கள் மற்றும் வேலை பூர்த்தியாக்கல் அறிக்கை போன்ற தேவப்பட்ட சான்றுகள் கிடைக்காமையால் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியவில்லை.

**3.4 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**பாதீட்டு முரண்**

ஏழு மீண்டெழும் செலவின விடயங்களின் கீழான 5.4 சதவீதம் தொடக்கம் 86.3 சதவீதம் வரையான வீச்சிலான ரூபா 7,828,154 கூட்டு மொத்தத் தொகையான சேமிப்புகளிற்கான திருப்திகரமான காரணங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 பொது வைப்புக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 36,863,113 மொத்தமான வைப்பு மீதிகளின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்காக கிடைத்திருக்கவில்லை.

(ஆ) ரூபா 8,645,728 கூட்டு மொத்தத் தொகையான ஆறு பிரதேச செயலகங்களின் மீளாய்வாண்டிற்கான வைப்பு மீதிகளின் வகைப்படுத்தலின் விபரங்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

(இ) ரூபா 2,586,065 கூட்டு மொத்தத் தொகையான வைப்புக்களின் நோக்கம் கணக்காய்வில் இனங்கான முடியாதிருந்தது.

**3.6 அரச உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கு**

26701 ஆம் இலக்க அரச உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்குகள் தொடர்பில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இணக்கக் கூற்றுக்களின் கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) தாபன விதிக்கோவையின் XXIV ஆம் இலக்க அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் அவர்களுடைய பதவி வறிதாக்கப்பட்ட 12

உத்தியோகத்தர்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 556,721 நிலுவையாகவிருக்கின்ற மீதியை அறவிடுவதற்கோ அல்லது சீராக்கல்களை மேற்கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 4,999,477 கூட்டு மொத்தத் தொகையான கடன் முற்பணக் கொடுப்பனவுகள் கட்டுநிதி பெறாமல் செய்யப்பட்டிருந்தது.

**3.7. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

---------------------------------------------------------

**3.7.1 வருடாந்த செயற்பாட்டுத் திட்டம்**

---------------------------------------------------

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மாவட்ட செயலகம் மீளாய்வாண்டிற்காக வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் இது மூன்று ஆண்டுகளிற்காக தயாரிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு தொடக்கத்தில் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.7.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்**

-------------------------------------------------

2014 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டு திணைக்களச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவு திட்டம் 2014 திசெம்பர் 31 வரையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.7.3 உள்ளக கணக்காய்வு**

--------------------------------

பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாவட்ட செயலகமானது இந்த மாவட்ட செயலகத்தின் பிரதம உள்ளக கணக்காய்வாளராக மாவட்ட செயலகத்தின் பிரதம கணக்காளரை நியமித்திருந்தது. இது தொடர்பில் திறைசேரி செயலாளரின் அனுமதி கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

(ஆ) நிதிப் பிரமாணம் 134(1) இன் படி, மீளாய்வாண்டிற்கான உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2014 திசெம்பர் 31 வரையும் இது தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.7.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை அமுல்படுத்துதல்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் குறைந்தது மூன்று மாதங்களிற்கு ஒருதடவை நடாத்தப்பட வேண்டிய போதிலும் 03 கூட்டங்கள் மாத்திரம் நடைபெற்றிருந்ததுடன் நடாத்தப்பட்ட அந்த கூட்ட குறிப்புகள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை. 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(iv) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது கூட்டங்களிற்கான அவதானிப்பாளராக கணக்காய்வாளரின் பிரதிநிதி அழைக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 3.8 சொத்துக்கள் முகாமைத்துவம்

மாவட்ட செயலகத்தின் சொத்துக்களின் கணக்காய்வு தெரிவு செவ்வையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வருடாந்த கணிப்பீட்டுச் சபையை நடாத்துதல்

(i) நிதிப் பிரமாணம் 757 இன் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான வருடாந்த கணிப்பீட்டுச் சபை அறிக்கை மிகைகள் மற்றும் குறைவுகள் மற்றும் ஏனைய சிபார்சுகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) முல்லைதீவு மாவட்டத்தில் 136 கிராம சேவகர் பிரிவுகளிலுள்ள களஞ்சிய விடயங்கள் மீதான வருடாந்த மெய்மையாய்வு மீளாய்வாண்டிற்காக மாவட்ட செயலகத்தால் நியமிக்கப்பட்ட சபையால் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாவட்ட செயலக செயலகத்தில் 16 உத்தியோகபூர்வ வாகனங்களின் பதிவு செய்யப்பட்டிருந்தது என கணக்காய்விற்கு விளக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாணடிற்கான ஒதுக்கீட்டுக் கணக்குகளில் 17 உத்தியோகபூர்வ வாகனங்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட செயலகத்தின் தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 220,890 ஆனதுடன் அவை ஒரு ஆண்டிற்கும் குறைவான இருக்கின்றன. எவ்வாறாயினும், நிதிப்பிரமாணம் 94(2) இன் பிரகாரம், பொறுப்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.9 இணக்கமின்மை

### (அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | |
| (i) நிதிப்பிரமாணம் 134(3) | - | மீளாய்வாண்டிற்கான உள்ளக கணக்காய்வு அறிக்கையின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன்வைக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 135 | 214,033 | மூன்று பிரதேச செயலகங்களிற்காக விடுமுறை நாள், எரிபொருள் முற்பணம், பிரயாண கோரிக்கை மற்றும் தொடர்பாடல் கட்டணங்கள் என்பவற்றிற்கான நாற்பத்து மூன்று கொடுப்பனவுகள் மாவட்ட செயலாளருக்கு பதிலாக பிரதேச செயலாளர்கள் அவர்களுடைய தற்றுணிவில் அனுமதித்திருந்தனர். |
| (iii) நிதிப்பிரமாணம் 137 | 87,481 | பத்து கொடுக்கல் வாங்கல்கள் மாவட்ட செயலாளரால் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) நிதிப்பிரமாணம் 138 | 5,578,923 | பதினாறு கொடுப்பனவுகள் சான்றுறுதி செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (v) நிதிப்பிரமாணம் 371(2)(சீ) | 50,000 | வீதி நாடகங்களிற்காக பொருட்கள் கொள்வனவு செய்வதற்கு ரூபா 50,000 |

| | | | |
|---|---|---|---|
| | | | ஆன கட்டுநிதி முற்பணம் நிறைவேற்று தரமல்லாதோருக்கு செலுத்தப்பட்டிருந்தது. |
| | (vi) நிதிப்பிரமாணம் 504 | - | அரச உத்தியோகத்தர்களிற்கான முற்பண காலாண்டு கூற்றின் பிரதி மாவட்ட செயலகம் மற்றும் ஆறு பிரதேச செயலகங்களால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | பொது நிர்வாகச் சுற்றறிக்கை | | |
| | (i) 1997 பெப்ரவரி 03 இன் 07/97 ஆம் இலக்கம் | - | மீளாய்வாண்டின் போது மாவட்ட செயலாளரால் செயலாற்றப்பட்ட 40 நாட்கள் விடுமுறை நாட்கள் வேலைகளிற்காக பொது நிரிவாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் முன் அங்கீகாரம் கணக்காய்விற்காக கிடைத்திருக்கவில்லை. |
| | (ii) 1988 ஆகஸ்ட் 30 இன் 29/88 ஆம் இலக்கம் | 6,066,220 | பாதுகாப்பு அமைச்சு செயலாளரின் அனுசரணை பெற்றுக்கொள்ளாமல் இருபாத்தியொன்பது உத்தியோகத்தர்களிற்கு இரண்டு ஆண்டு கடன்கள் செலுத்தப்பட்டிருந்தது. |
| | | 1,626,060 | பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு செயலாளரின் அனுசரணையை பெற்றுக்கொள்ளாமல் 04 உத்தியோகத்தர்களிற்கு இரண்டு ஆண்டு கடன்கள் செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) | திறைசேரிச் சுற்றறிக்கை | | |
| | 2004 பெப்ரவரி 24 இன் 01/2004 ஆம் இலக்கம் | | மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. |

**3.10. முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டது

2009 செப்தெம்பர் 01 ஆந்திகதிய 446 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைக்கு முரணாக மூன்று பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு அவர்களுடைய எல்லையை விஞ்சி மீளாய்வாண்டிற்காக ரூபா 44,677 கூட்டு மொத்த தொகையான தொலைத்தொடர்பு கட்டணங்கள் செலுத்தப்பட்டிருந்தது.

**3.11. நட்டங்களும் சேதங்களும்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2014 நவம்பர் 28 இல் உத்தியோகபூர்வ வாகனங்கள் விபத்துக்குள்ளான காரணமாக ஏற்பட்ட ரூபா 227,926 ஆன நட்டம் மீளாய்வாண்டின் போது ஒதுக்கீட்டு கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்காததுடன் நிதிப்பிரமாண இல. 104(2) இன் பிரகாரம் இந்த நட்டங்கள் மீது நடவடிக்கையோ அல்லது அறிக்கைகளோ கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.12. முகாமைத்துவ நலிவுகள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பண்டாரவன்னியன் கிராமிய அபிவிருத்தி சங்கத்துடன் கைசாத்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம், யுனிசெப்பால் நிதியளிக்கப்பட்டு அமுலாக்கப்பட்ட, 2013 யூலையிலிருந்து 2014 பெப்ரவரி வரை ஒட்டிசுட்டான் பிரதேச செயலகத்தின் கீழான பகுதிகளில் பொது மக்களிற்காக மலசலகூட வசதிகள் நிர்மாணிப்பது தொடர்பில் ஏற்பட்ட ரூபா 2.71 மில்லியன் கூட்டு மொத்தத் தொகையான மோசடித் தன்மையான கொடுக்கல் வாங்கல்களை உள்ளக கணக்காய்வு புலனாய்வுகள் அறிக்கையிட்டிருந்தன. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பண்டாரவன்னியன் கிராமிய அபிவிருத்தி சங்கத்துடன் கைசாத்திட்ட உடன்படிக்கை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 2 மில்லியன் தொகை உச்சவரம்பை விஞ்சி கொள்வனவு செய்யப்படாமல் கிராமிய அபிவிருத்தி சங்கத்தின் ஊடாக ரூபா 10,570,000 பெறுமதியான வேலைகள் செய்யப்பட்டிருந்தது.

(இ) ஒட்டிசுட்டான் பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் மற்றும் கிராமிய அபிவிருத்தி சங்க உத்தியோகத்தர் மேற்பார்வை, கண்காணிப்பு, வங்கி கணக்கு செயற்பாடுகள் மற்றும் வேலையின் முன்'னேற்றம் என்பன தொடர்பான வேலைகளை மாவட்ட செயலாளரால் பொறுப்புக்களை கையளிக்கப்பட்டிருந்த போதிலும் இது அவர்கள் நடவடிக்கைகளை முறைப்படி மேற்பார்வை செய்யப்பட்டிருக்கவில்லை என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

**3.13. மனிதவளங்கள் முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 17 | 17 | - | - |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | 02 | - | - |
| (iii) | இரண்டாம் நிலை | 209 | 197 | 12 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 30 | 44 | - | 14 |
| | மொத்தம் | 258 | 260 | 12 | 14 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மாவட்ட செயலகம் மீளாய்வாண்டு இறுதியளவில் 12 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பதினான்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் அரச முகாமைத்துவ உதவியாளர்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்திடமிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் மிகையாக வேலைக்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர்.